https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

03RD MARCH 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 69



03 அடிக்கு மேல் அடி



## நாடாளுமன்றத் தேர்தலை கோரும் மொட்டு:

# ஜனாதிபதி தேர்தலை ஒத்திப்போடுவதற்கு சதி

நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துமாறு மொட்டு கட்சி எம்பிக்களில் அதிகமானவர்கள் ஜனாதிபதியைக் கோருவதற்குத் திட்டமிட்டுள்ளனர் என்று அறிய முடிகிறது. இது ஜனாதிபதி தேர்தலை ஒத்திப்போடுவதற்கான சதி என அரசியல் வட்டாரத்தில்

02



## ஜனாதிபதி தேர்தலை ஒத்திப்போட முடியாது

வேறு தேர்தல்களைப்போல் ஜனாதிபதி தேர்தலை எக்காரணம் கொண்டும் ஒத்திப்போட முடியாது என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளனர்.

02

## சு.கவின் அவசர கூட்டம்



சிறிலங்கா சுதந்திர கட்சியின் மத்திய குழு கூட்டம் இன்று பிற்பகல் 5 மணிக்கு கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் அவசரமாகக் கூடுகிறது.

கொழும்பு -10 டார்லி வீதியில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் இடம்பெறவுள்ள இந்த அவசர கூட்டத்துக்கான நோக்கம் அறிவிக்கப்படவில்லை.

## அனுர தொடர்ந்தும் முன்னிலையில்



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி வாய்ப்பு ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸாநாயக்காவுக்கே அதிகம் உள்ளது என்றும் அவர் தொடர்ந்தும் முன்னிலையிலேயே உள்ளார் என்றும் இது தொடர்பில் ஆய்வு நடத்திய சுகாதார கொள்கைக்கான நிறுவனம் தெரிவித்துள்ளது.

அனுர 50 வீத ஆதரவையும் ,சஜித் பிரேமதாசா 36 வீத ஆதரவையும் ரணில் விக்ரமசிங்க மற்றும் மொட்டு கட்சி தலா 7 வீத ஆதரவையும் கொண்டுள்ளனர் என்று அந்த நிறுவனம் மேலும் தெரிவிக்கிறது.

ஹரே கிருஷ்ணா

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

புது ஆலயத்திற்கான வர்ணபூச்சு வேலைகளும் மற்றும் முடிவு வேலைகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன





ராதா கிருஷ்ணா



சீதா ராம்



ஸ்ரீ பாலாஜி



நரசிம்மர்

உயரமான கோபுரம் தசவதார மூர்த்திகள், பளிங்கு தரைகள் மற்றும் கண்கவர் வேலைபாடுகள்.



வர்ணபூச்சுக்கான மதிப்பீடு
ரூபா.5,000,000/= (5 மில்லியன்)
அன்பான பக்தர்களே நீங்களும்
இச்சேவையில் பங்கு பற்றி
விரைவில் கும்பாபிஷேகம் செய்து
பகவானின் அருளை பெறுவோமாக.

Bank Detials

Commercial Bank
Bank Branch - Kotahena Branch
Account Name - ISKCON -TEMPLE FUND
Account No. - 1120017042
Swift Code - CCEYLKLX

Hatton National Bank
Bank Branch - Jempettah Street
Account Name - ISKCON
Account No. - 207010000891
Swift Code - HBLILKLX

சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்
ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ. ச. பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
+94 772288166 +94 112433325
188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு- 13
E-Mail: info@iskconsrilanka.org Web: www.iskcon.lk
ISKCON SRI LANKA

புதுசுடர்
www.puthusudar.lk
2024 MARCH 03 - SUNDAY

# பேசிப் பேசியே காலத்தை தள்ள வேண்டியதுதான்...

இலங்கையின் அரசியல் தளத்தில் இப்போது அதிகம் பேசப்படுகின்ற விடயங்களுள் 13 ஆம் திருத்தச் சட்டத்தில் அடங்குகிற பொலிஸ் அதிகாரமும் ஒன்று.

இந்த பொலிஸ் அதிகாரத்தை 13 இல் இருந்து முற்றாக நீக்கும் தனிநபர் பிரேரணை ஒன்றை உதய கம்மன்பில எம்பி நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

இந்தப் பிரேரணைக்கு ஏற்றவாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இப்போது கருத்துத் தெரிவித்துள்ளார். பொலிஸ் அதிகாரம் தவிர்த்து அனைத்து விடயங்கள்பற்றி பேசுவதற்குத் தயார் என்று கூறியுள்ளமைதான் அது.

அரசியல் தீர்வு குறித்து திடீரென பேசுவதும்-அதற்காக அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசிப்பதும்-பின்னர் அப்படியே விட்டுவிடுவதும் ரணிலின் இயல்பு.அந்த வரிசையில்தான் இப்போதும் ஜனாதிபதி பேசியுள்ளார்.

அவர் ஜனாதிபதியானதும் இந்தப் பேச்சைத் தொடக்கி வைத்தார்.தமிழ் கட்சிகளை அழைத்துப் பேசினார்.

அவர் இந்தியா சென்று இந்திய பிரதமர் மோடியை சந்தித்துவிட்டு வந்தததும் இந்தப் பணியைத் துரிதப்படுத்தினார்.பேச்சு அதிகமானது.

இலங்கைக்கு இந்தியா எந்தவோர் உதவியை செய்வதற்கு முன்வந்தாலும் அந்நாடு முதலில் விதிக்கும் நிபந்தனையாக இருப்பது அல்லது கோரிக்கையாக இருப்பது 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான்.

அது இந்தியாவின் தலையீட்டால் கொண்டுவரப்பட்டது என்பதால் அந்த முறைமை இலங்கையில் இருக்க வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது.

அந்த முறைமையால் வடக்கு-கிழக்கு பிரச்சினை தீருகிறதா இல்லையா என்பதை விட தனது ஆதிக்கத்துக்கு சான்றாக 13 என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடாகும்.

அந்த வகையில்தான் இந்தியா சென்ற ஜனாதிபதியிடம் 13 ஐ நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடி கொடுத்திருந்தார்.

அதனால் இந்தியாவில் இருந்து திரும்பிய வேகத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சர்வகட்சி மாநாட்டை கூட்டினார்.வடக்கு-கிழக்கிற்கு பொலிஸ் அதிகாரங்களைத் தவிர எல்லாவற்றையும் வழங்கப் போவதாக அறிவித்தார்.

இதை நடைமுறைப்படுத்தும்போது தெற்கில் இருந்து-சிங்கள மக்களிடமிருந்து எதிர்ப்பு வந்தால் அதை சமாளிப்பதற்காக-அதில் இருந்து தப்புவதற்காக ரணில் 13 இன் பொறுப்பை நாடாளுமன்றத்திடம் ஒப்படைத்தார்.

13 என்பது ஜனாதிபதியுடன் தொடர்புபட்ட ஒன்றல்ல நாடாளுமன்றத்துடன் தொடர்புபட்டது. அதை நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்று நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்று கூறி ஜனாதிபதி பந்தை அந்தப் பக்கம் திரும்பினார்.

இது தொடர்பில்-13 ஐ அமுல்படுத்துவது தொடர்பில் கட்சித் தலைவர்கள் அவர்களின் யோசனைகளை சமர்ப்பிப்பதற்கு 2 வார கால அவகாசமும் வழங்கியிருந்தார் ஜனாதிபதி.

ஒருவேளை, நாடாளுமன்றத்துக்குள் 13 இற்கு எதிரான நிலைப்பாடு அதிகமாக இருந்தால் நாடாளுமன்றத்தின் தலையில் போட்டுவிட்டு தமிழ் மக்களிடமிருந்து ரணில் தப்பிவிடுவார்.

ஒருவேளை,13இற்கு ஆதரவான நிலைப்பாடு அதிகமாக இருந்தால்-அதை சிங்கள மக்கள் எதிர்த்தால் அதையும் நாடாளுமன்றின் தலையில் போட்டுவிட்டு சிங்கள மக்களிடமிருந்து தப்பிவிடுவார்.

இந்தியாவுக்கும் இதே வேலையைச் செய்வார்.இதனால் 13 இன் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.13 அமுல்படுத்தப்படுமா ? செயலற்றுக் கிடக்கும் மாகாண சபைகளை மீண்டும் இயக்குவதற்காக தேர்தல் நடத்தப்படுமா என்ற கேள்விகள் இப்போது எல்லோரது மனங்களிலும் எழுந்துள்ளன.

உண்மையில் 13 ரணிலுக்கு இப்போது தேவைப்படுவது வடக்கு-கிழக்கு தமிழர்களின் வாக்குகளை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொ ள்வதற்காகத்தான்.இல்லையென்றால் அவரும் இதுபற்றிப் பேசமாட்டார்.

பொருளாதாரரீதியில் நாடு வீழ்ந்து கிடக்கும் இந்த நிலையில் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கே கவனம் செலுத்த வேண்டும்இப்போது அதிகாரப் பகிர்வுபற்றியெல்லாம் பேச முடியாது என்று கூறிவிட்டு ரணில் சென்றிருப்பார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தல் அவருக்கு கடும் சவாலாக அமைந்துள்ளதால் வடக்கு-கிழக்கு தமிழர்களின் வாக்குகள் அவருக்கு கட்டாயம் தேவை. அதனால்தான் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் அரசியல் தீர்வுபற்றி பேசுகிறார்.அதற்கான செயற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளார்.

இருந்தும், இது ஒரு நாடகம். ஜனாதிபதி தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை குறிவைத்த செயற்பாடு என்று உணர்ந்ததால் கஜேந்திரன் பொன்னம்பலத்தின் கட் சி இந்த வேலைத்திட்டத்திற்குள் வரவில்லை. அவர்கள் விலகி நிற்கிறார்கள்.

அதேபோல்தான் மொட்டு கட்சியும். அவர்களும் 13 அமுல்படுத்துவத்தைக் கடுமையாக எதிர்க்கிறார்கள்.மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதிக்கு இதை அமுல்படுத்தும் அதிகாரம் இல்லை என்கிறார்கள்.

இந்த நிலையில்தான் 13ஐ அமுல்படுத்துவது தொடர்பில் மீண்டும் பேசியுள்ளார் ரணில்.அதிலும் முக்கியமாக பொலிஸ் அதிகாரமற்ற 13 ஐ வழங்குவதுபற்றிப் பேசியுள்ளார்.இதை தமிழ் தரப்பு விரும்பாது.

மறுபுறம், பொலிஸ் அதிகாரம் இல்லாமல்கூட 13ஐ அமுல்படுத்துவதை மொட்டு கட்சி எதிர்க்கிறது.

ஆகவே,13 இன் அமுல் என்பது சிக்கலான ஒன்றாகும்..அதைப்பற்றி சும்மா பேசி பேசியே காலத்தைத் தள்ள வேண்டயதுதான்.







தெஹிவளை அல் இமாம் அல் அஸ் அரபிக் கல்லூரி ஏற்பாட்டில் ரமலான் வருகையை முன்னிட்டு நிகழ்வு ஒன்று 02.03.2024 வெள்ளவத்தை மெரைன் ரைவில் இடம் பெற்றது கனடாவில் உள்ள சலாஹுடீன் பள்ளிவாசலின் பிரதான இமாம் இஸ்லாமிய பேச்சாளர் அஷ்ஷைக் ஜீல் ஸாதிக் - குழுவினர்களான அஷ்ஷைக் ஸஃத் - ஹார்மெனி பேன்ட், அல் ஹாஜ் ஹம்ஸா மஹ்ஸுமி முஸ்அத் கரீம் ஆகியோர் இவ் வாரம் இலங்கை வந்திருந்தனர். இவர்களது ஆன்மீக பேச்சும் இடம்பெற்றது அத்துடன் ஸலாவாத் கிராத் மற்றும் , துஆப் பிராத்தனையும் நிகழ்த்தினார்கள்.

இந் நிகழ்வில் முன்னாள் ஆளுனர் அசாத் சாலி கல்லூரி அதிபர் மாணவர்கள் மற்றும் தெஹிவளை வெள்ளவத்தை பேருவளை அழைக்கப்பட்ட அதிதிகளும் பெருமளவில் கலந்து சிறப்பித்தனர்.

(அஷ்ரப் ஏ சமத்)

## நாடாளுமன்றத்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தினால் ஆட்சியைத் தக்கவைப்பதற்கு அரசுக்கு சிறிது வாய்ப்புண்டு என்று சிலர் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அதாவது, அரசு குறைந்த ஆசனங்களை எடுத்தாலும் ஏனைய கட்சிகளில் உள்ளவர்களை வளைத்துப்போட்டு நாடாளுமன்ற ஆட்சியைத் தக்க வைக்க முடியும்.அதை வைத்தே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியும் என்று கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இதே நிலைப்பாட்டில் உள்ள மொட்டு கட்சி எம்பிக்கள் பலர் நாடாளுமன்றத் தேர்தலையே முதலில் நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோரவுள்ளனர்.

---

## ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அரசமைப்பு கால வரையறையை நிர்ணயித்துள்ள ஒரேயொரு தேர்தல் ஜனாதிபதி தேர்தல் மட்டும்தான் எனத் தெரிவித்துள்ள ஆணையாளர் நாயகம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை சம்பந்தட்ட அமைச்சர் விரும்பினால் ஒரு வருடத்துக்கு முன் நடத்தலாம்.அல்லது மேலும் ஒரு வருடத்துக்கு அதன் ஆயுட் காலத்தை நீடிக்கலாம். அதேபோல் நாடாளுமன்றத் தேர்தலை 2 வருடங்களில் ஜனாதிபதியால் நடத்த முடியும்.ஜனாதிபதி தேர்தலை அவ்வாறு செய்ய முடியாது. உரிய நேரத்தில் நடத்தியே ஆக வேண்டும் என்றார்.








# அடிக்கு மேல் அடி





நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் அரசு என்னதான் முன்னேற்றகரமான தகவல்களைக் கூறினாலும் களநிலவரம் அந்தக் கூற்றுக்கு மாறானது.

மக்கள் வாழமுடியாமல் நாளுக்கு நாள் துன்பப்படுகிறார்கள்.ஒரு பக்கம் பொருட்களின் விலை அதிகரிப்பு மறுபக்கம் மின்கட்டண அதிகரிப்பு, இன்னொரு பக்கம் மின் துண்டிப்பு.அதில் மின்கட்டண



அதிகரிப்பு என்பது மக்களை மேலும் சிக்கலுக்குள் தள்ளிவிடுவதாக அமைந்துள்ளது.

மக்கள் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறத் தொடங்கியுள்ளனர். முடிவே இல்லாமல் விலையேற்றத்தைத் தவிர வேறு எந்த மாற்றமும் நிகழ்வதாக இல்லை.

பணக்காரர்களால்கூட வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.ஏழைகளின் நிலைபற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

மக்கள் எந்தப் பக்கமும் நகர முடியாமல் இறுகிப்போய் நிற்கிறார்கள்.தீர்வு என்ற கதைக்கே இடமில்லை.அரசாங்கம் அரசாங்கத்தின் பிரச்சினைக்கான தீர்வை மட்டும்தான் முன்வைக்கிறது.மக்களின் பிரச்னைக்கு எந்தத் தீர்வும் கிடையாது.

புதிய ஜனாதிபதியால் இந்த நாட்டுக்கு–நட்டு மக்களின் பிரச்சினைக்கு முன்வைக்கப்பட்ட தீர்வு என்ன? இவர் பதவி ஏற்றதால் மக்கள் அடைந்த நன்மை என்ன?

கோத்தா இருக்கும்போது என்ன நடந்ததோ அதுதான் இப்போதும் நடக்கிறது.அதைவிட மோசமாக நடக்கிறது. போனவரும் அப்படியே வந்தவரும் அப்படியே.

எரிபொருள் வரிசை இல்லாமலாக்கப்பட்டமைதான் மக்களின் பிரச்சனைக்கான சரியான தீர்வு என்பதுபோலவும் அதைச் செய்தது பெரிய சாதனைப்போலவும் கூறிக்கொண்டு திரிகிறது இந்த அரசு.

மக்கள் வீதிக்கு இறங்கி போராடி கோத்தாவை விரட்டியடித்து பெற்றுக்கொண்ட நன்மை என்ன? எதுவும் இல்லை.மாறாக மேலும் பிரச்சினையைத் தேடிக்கொண்டார்கள் என்றே சொல்ல வேண்டும்.

கோத்தாவை விரட்டிய மக்கள் ரணிலைக் கண்டதும் அப்படியே போராட்டத்தை நிறுத்திக்கொண்டனர்.அவர் அனுபசாலி–திறமைசாலி–சர்வதேச தொடர்புடையவர் என்ற மாயைக்குள் மக்கள் சிக்கி ஏமாந்துபோனார்கள்.

அவரது சர்வதேச தொடர்பால் எதுவும் நடக்கவில்லை.ஒரு உதவியும் கிடைக்கவில்லை.கோத்தாவை விட்டிருந்தால் என்ன நடந்திருக்குமோ அதுதான் இப்போது நடக்கிறது.

மிகவும் சூட்சுமமான முறையில் தங்களை பாதுகாத்துக்கொள்வதற்காக ரணிலை ஜனாதிபதியாக்கி வெற்றிகண்டுள்ளது இந்த அரசு.மக்களின் போராட்டம் வீணாகவே போயுள்ளது.

ராஜபக்ஸ குடும்பத்தைப் பாதுகாக்க வந்தவர் எப்படி மக்களை பாதுகாப்பார்? எப்படி மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பார்?

மீண்டும் தான் எப்படி ஜனாதிபதியாக முடியும் என்பதுபற்றித்தான் ரணில் சிந்திக்கிறாரே தவிர எப்படி மக்களின் பிரச்சினைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைப்பது என்பதுபற்றி சிந்திப்பதாக இல்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்தி வைத்துவிட்டு ஜனாதிபதி தேர்தலை நடத்துவது பற்றித்தான் ரணில் யோசிக்கிறார்.13 ஆவது திருத்தச் சட்டத்தை–அதிகாரப்பகிர்வை வழங்கப்போவதாகக் கூறிக்கொண்டு அதனூடாக வடக்கு–கிழக்கு தமிழர்களின் வாக்குகளை அபகரித்து ஜனாதிபதியாகும் திட்டத்தில்தான் ரணில் உள்ளார்.

அவர் மக்களின் தீர்வாக நம்பி இருப்பது சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை மட்டும்தான். அதுவரைக்கும் மக்கள் இப்படித்தான் துன்பப்படப்போகிறார்கள்.அது கிடைத்தாலும்கூட பெரிய மாற்றம் ஒன்றும் நிகழ்ந்துவி டாது என்பதுதான் உண்மை.

கோத்தா இருக்கும்போது இருந்த நிலைமையைவிட நிலைமை இப்போது மோசமாகவே உள்ளது.அவர் பதவியை விட்டு ஓடும்போது இருந்த பொருட்களின் விலைகள் அல்ல இப்போது இருப்பது.பல மடங்குகள் அதிகரித்துவிட்டன.

தற்போதைய மின்கட்டண அதிகரிப்பால் மக்கள் மேலும் சிக்கலுக்குள் வீழ்ந்திருக்கின்றனர்.மின்கட்டணத்தை செலுத்துவதற்காக தனியாக உழைக்க வேண்டிய கட்டத்தில் மக்கள் இருக்கின்றனர்.


மின் கட்டணத்தை அதிகரித்தது மாத்திரமன்றி அதைச் செலுத்துவதற்கான கால அவகாசத்தையும் வெட்டிவிட்டது.

இதனால் தற்போதுவரை நாட்டில் 10 லட்சத்துக்கும் அதிகமான மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. பொருளாதார பிரச்சினை காரணமாக அதிகரித்த மின் கட்டணத்தை மக்களால் செலுத்த முடிய வில்லை. இதனால் மூழ்கியுள்ளன அந்த இடங்கள்.

மின்கட்டணமும் அதிகரித்து–அந்த அதிகரிப்பால் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கின்ற போது மக்களின் நிலைமை மிக மிக மோசமாக மாறும். மக்கள் மீண்டும் ஒரு போராட்டத்துக்குச் செல்வதற்கு இந்த நிலைமை உந்து சக்தியாக மாறும் என்றே தெரிகிறது.

***

**மின்கட்டணத்தைச் செலுத்துவதற்காக மாத்திரம் தனியாக உழைக்க வேண்டியுள்ளது. நன்றாக சம்பாதிக்கின்ற பணக்காரர்களால்கூட இந்தச் சுமையைச் சுமக்க முடியவில்லை. ஏழைகளின் நிலைபற்றி சொல்லத் தேவையில்லை.**



# புனித ஹஜ்
# HAJJ 2024
## ஹஜ்ஜுக்கான புதிவுகள் ஆரம்பம்



IATA

**36** வருட ஹஜ் உம்றா அனுபவத்துடன் இம்முறை புனித ஹஜ்ஜிற்காக அல்ஹாஜ் சையாப் அன்வர் அவர்களின் கண்காணிப்பில் ஹாஜிகளை அழைத்துச்செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது

**சப்ரா ட்ரவல்ஸ் & டுவர்ஸ்.**

**அஸீஸியா செல்வதில்லை மக்காவில் தங்குவது**

ஹஜ் பெகேஜில் அடங்குபவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- மினாவில் B Category Tent, தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விசா மற்றும் விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சிறப்பான சேவை.

**நீங்கள் எதிர்பாராத நியாய கட்டணம், நிறைவான சேவை**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

**அல்ஹாஜ் சையாப் அன்வர்**
**0775046995 I 0777667152**
**அல்ஹாஜ் ஜாபிர் - 0767007391**

## Safra Travels & Tours (Pvt) Ltd

FLG - 4, Dias Place, Gnasinghapura, Colombo -12.
Tel: (0094) 0112 335699 I Fax: 0112335043
E- mail: safra_travels@yahoo.com






47 ஆண்டுகால அனுபவமும், முத்த உலமாவும் ஹாஜிகளுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஹஜ் உம்றாவுக்கு வழிகாட்டும் அல்ஹாஜ் மவ்லவி ஏ.எல்.எம்.கலீல் மதனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் ஹஜ்பயணிக்கும் வாய்ப்பு

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

As Sheikh M A M Masooth Ahmed (Hashimi) JP
077 9000 115
(Kattankudy)

As Sheikh M A Ibrahim (Gafoori)
077 42 39 389
(Colombo)

Al Haj Mishab JP
077 400 8485
(Negombo)

நியாய கட்டணம், நிறைவான சேவை, நேர்த்தியான வழிகாட்டல்

மேலதிக விபரங்களுக்கு:

**+94 777 909 377 I +94 777 918 978**

## BURAQUE TRAVELS (PVT) LTD

+94 11 267 8811
Info@buraque.lk
62,Dematagoda Road, Colombo -09 Sri Lanka

In Service
Over 3 Decades

IATA



# ஹஜ்
# HAJJ 2024
## வாழ்நாளில் மறக்கமுடியாத பயணம்



Our Services

- Accommodation in Makkah ( 5 Star Hotel - Clock Tower)
  in Madinah ( 4 Star Hotel )
  in Mina Tent - B Category
- Sri Lankan Meals
- Luxury Ground Transport
- Visa with Insurance and Air Ticket
- Guidance By Ashsaik Suib Deeni

Luxury Package
Short Package



தரமான சேவையுடன் அஷ்ஷேக் சுஐப் தீனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் புனித ஹஜ்ஜை பூரண திருப்தியுடன் நிறைவேற்ற காலம் தாழ்த்தாமல் தொடர்புகொள்ளுங்கள்

For further details, contact:
**Alhaj Askar Aunn - 0777 03 15 23**
**Alhaj Aunn - 077 55 42 660**

## The Global Travels & Leisure Pvt Ltd

ஹஜ் உம்றா சேவை நிறுவனம்
No.653, Maradana (Next to Sampath Bank ) Colombo 10
Tel: 0117221876 I 0117221720 E-mail: askar@theglobal.lk



# புனித ஹஜ் 2024

இம்முறை புனித ஹஜ்ஜிற்காக ஹாஜிகளின் நலன் கருதி 3 பெகேஜ்களில் அழைத்துச் செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது.



**PAKAGE -A: 20,95,000/-**
முஅல்லிம் - B

**PAKAGE -B: 16,95,000/-**
முஅல்லிம் - C , Clock Tower

**SORT PAKAGE -B: 18,95,000/-**

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

**ரமழான்**
இறுதி 15 நாட்கள் உம்றா பெகேஜ்:
**749,000/-**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

மேலதிக விபரங்களுக்கு:
அல்ஹாஜ் மௌலவி பைசல் பின்னூரி - 0777141151
அல்ஹாஜ் மௌலவி ஸகரியா இனாமி - 0777151156

# பின்னூரியா
ஹஜ் உம்றா சேவை நிறுவனம்
**BINNOORIYA HAJJ UMRAH SERVICE**
#204/01, Grandpass Road,Colombo-14. and Asna Super Market, Akurana.

## நீங்கள் இப்போது அரசியலில் எந்த அணியோடு நிற்கிறீர்கள் ?

## ஐக்கிய மக்கள் சக்திக்குள் இப்போது கடும் பிரச்சினை உள்ளதல்லவா?

## முன்னாள் இராணுவ அதிகாரிகளை கட்சிக்குள் சேர்ப்பதால் சரத் பொன்சேகா கட்சியுடன் முரண்பட்டுக்கொண்டு இருக்கிறாரே?

## ஜனாதிபதிக்கும் உங்களுக்கும் இடையிலான தொடர்பு எப்படிப்பட்டது ?

## அரசில் இணையுமாறு ஜனாதிபதி உங்களை அழைத்ததில்லையா?

## எந்தத் தேர்தல் முதலில் வரும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

## ரணில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரா?

## கடந்த நாடாளுமன்ற தேர்தலில் உங்களது கூட்டணிக்குக் கிடைத்த 4 லட்சம் வாக்குகளும் அப்படியே உள்ளதா?

## உங்கள் பார்வையில் இந்த நாட்டை முன்னேற்ற முடியுமா?

## தேசிய அரசை உருவாக்கும் திட்டம் ஒன்று இருப்பதாக சொல்லப்படுகிறதே?



# ரணில் நிச்சயம் போட்டியிடுவார்

**இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் மனோ கணேசன் எம்பி. அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.**

**கேள்வி : நீங்கள் இப்போது அரசியலில் எந்த அணியோடு நிற்கிறீர்கள் ?**

பதில் : நாம் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் பங்காளி கட்சி.நாம் அந்த பக்கம் ,இந்த பக்கம் பாயமாட்டோம். எனக்கு ஒரு அரசியல் ஒழுக்கம் உண்டு. அதை மீறமாட்டேன்.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்திக்குள் இப்போது கடும் பிரச்சினை உள்ளதல்லவா?**

பதில் : ஆம்..உண்டு.பிரச்சினைகள் இல்லாத கட்சிகள் எதுவும் இல்லையே.

**கேள்வி : முன்னாள் இராணுவ அதிகாரிகளை கட்சிக்குள் சேர்ப்பதால் சரத் பொன்சேகா கட்சியுடன் முரண்பட்டுக்கொண்டு இருக்கிறாரே?**

பதில் : இந்த முன்னாள் இராணுவ அதிகாரிகள் வந்து அரசியலில் என்ன செய்யப்போகிறார்கள் என்று எனக்குத் தெரியாது.இவர்களை சரத் பொன்சேகாவுடன் ஒப்பிட முடியாது.

பொன்சேகா அர்ப்பணிப்பு செய்துதான் 2010 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்வந்தார்.அவரது அர்ப்பணிப்பை நாம் மதிக்க வேண்டும்.

இந்த இராணுவ அதிகாரிகளை கட்சிக்குள் இணைப்பது தொடர்பில் பொன்சேகாவிடம் ஆலோசனை பெற்றிருக்க வேண்டும்.

டிலான் பெரேரா போன்றவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவதில் பிரச்சினை இல்லை. ஆனால்,கோத்தாவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்காக இனவாதத்தைப் பரப்பி செயற்பட்டவர்களை இணைப்பதுதான் பிரச்சினை.

அவர்கள் வருவது வாக்கு வங்கியுடன் அல்ல.எமது வாக்குகளை பிரிப்பதற்காக வருகிறார்கள்.

**கேள்வி : கடந்த நாடாளுமன்ற தேர்தலில் உங்களது கூட்டணிக்குக் கிடைத்த 4 லட்சம் வாக்குகளும் அப்படியே உள்ளதா?**

பதில் : இல்லை.அதிகரித்துள்ளது. கடந்த தேர்தல்களில் ஐயாயிரம்,நான்காயிரம் வாக்குகளால் கிடைக்காமல் போன எம்பி ஆசனங்கள் இந்த முறை எமக்குக் கிடைக்கும்.மக்கள் எங்களுடன் உள்ளார்கள்.

**கேள்வி : ஜனாதிபதிக்கும் உங்களுக்கும் இடையிலான தொடர்பு எப்படிப்பட்டது?**

பதில் : நல்ல உறவு உண்டு. அவர் ஜனாதிபதியானதன் பின் 10 தடவைகளுக்கு மேல் சந்தித்துள்ளேன். அடிக்கடி தொலைபேசியில் பேசுவேன்.

அதற்காக நான் அரசில் இணைவேன் என்று அர்த்தமல்ல.அது அவருக்கும் தெரியும்.

**கேள்வி : அரசில் இணையுமாறு ஜனாதிபதி உங்களை அழைத்ததில்லையா?**

பதில் : அழைத்திருக்கிறார்.நான் மறுத்துவிட்டேன்.கோத்தாபய விரட்டப்பட்ட பின்னர் இருப்பது பொய்யான நாடாளுமன்றம்.எல்லோரும் எம்பி பதவியில் இருந்து விலக வேண்டும் என்று கூறினேன்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு இப்போது வேண்டுமானாலும் செல்வதற்கு நாம் தயார்.எமக்கு தோல்வி பயமில்லை.மக்கள் எம்மோடுள்ளனர்.

**கேள்வி : ஜனாதிபதிக்கும் உங்களுக்கும் இடையிலான தொடர்பு எப்படிப்பட்டது?**

பதில் : நல்ல உறவு உண்டு. அவர் ஜனாதிபதியானதன் பின் 10 தடவைகளுக்கு மேல் சந்தித்துள்ளேன்.

அடிக்கடி தொலைபேசியில் பேசுவேன்.

அதற்காக நான் அரசில் இணைவேன் என்று அர்த்தமல்ல.அது அவருக்கும் தெரியும்.

**கேள்வி : அரசில் இணையுமாறு ஜனாதிபதி உங்களை அழைத்ததில்லையா?**

பதில் : அழைத்திருக்கிறார்.நான் மறுத்துவிட்டேன்.கோத்தாபய விரட்டப்பட்ட பின்னர் இருப்பது பொய்யான நாடாளுமன்றம்.எல்லோரும் எம்பி பதவியில் இருந்து விலக வேண்டும் என்று கூறினேன். நாடாளுமன்றத் தேர்தலுக்கு இப்போது வேண்டுமானாலும் செல்வதற்கு நாம் தயார்.எமக்கு தோல்வி பயமில்லை. மக்கள் எம்மோடுள்ளனர்.

**கேள்வி : எந்தத் தேர்தல் முதலில் வரும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

பதில் : ஜேவிபி எழுச்சியடைந்துள்ளது என்பதை மறுக்க முடியாது.ஜனாதிபதி தேர்தலில் அணுரகுமாரவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று தெரிந்தால் அவருக்கு எதிராக ஏனைய கட்சிகள் ஒன்றிணைவதற்கு வாய்ப்புண்டு.

ஒன்றுசேர்க்க முடியாதுவிட்டால் ஜனாதிபதி நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்வார்.ஒன்று சேர்க்க முடிந்தால் ஜனாதிபதி தேர்தலுக்குச் செல்வார். ஆனால், ஒன்றிணையும் வாய்ப்பு மிகக் குறைவு.

நாடாளுமன்றத் தேர்தலுக்குச் சென்றால் ஜேவிபியால் வெற்றியைப் பெற முடியாது.

இந்த விடயங்களை அடிப்படையாக வைத்தே எந்தத் தேர்தலை முதலில் நடத்துவதென்று ஜனாதிபதி தீர்மானிப்பார்.

**கேள்வி : ரணில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரா?**

பதில் : ஒரு தடவை அவரைச் சந்தித்தபோது இதுபற்றி அவரிடம் கேட்டேன்.அவர் போட்டியிடுவதாகக் கூறினார்.ஆனால்,அவரால் ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட முடியாது.கட்சி பலவீனமாகவுள்ளது. பொதுவேட்பாளராகத்தான் போட்டியிட வேண்டும்.

**கேள்வி : தேசிய அரசை உருவாக்கும் திட்டம் ஒன்று இருப்பதாக சொல்லப்படுகிறதே?**

பதில் : தேசிய அரசின் தேவை இல்லை.தேசிய அரசுபற்றி இப்போது பேசப்படுமாக இருந்தால் அது நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திப்போடுவதற்கான சதியாக இருக்கலாம்.

இவ்வாறான எல்லா யோசனைக்காலும் இப்போதைக்கு நிறுத்தப்பட வேண்டும்.அனைத்து வீதிகளும் நாடாளுமன்றத் தேர்தலை நோக்கியே செல்ல வேண்டும்.புதிய மக்கள் ஆணையுடன்தான் அடுத்த ஆட்சி அமைய வேண்டும்.

**கேள்வி : உங்கள் பார்வையில் இந்த நாட்டை முன்னேற்ற முடியுமா?**

**கோத்தாவை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்காக இனவாதத்தைப் பரப்பி செயற்பட்டவர்களை ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைப்பது பிரச்சினையாகும். அவர்கள் வருவது வாக்கு வங்கியுடன் அல்ல.எமது வாக்குகளை பிரிப்பதற்காகத்தான் வருகிறார்கள்.**

பதில் : நிச்சயமாக முடியாது.இந்த நாட்டை விட்டுச் செல்ல முடியாது. வாக்களிக்கச் செல்லும்போது மக்கள் மூளையை சரியாகப் பயன்படுத்த வேண்டும். திருடர்களுக்கு –கொலைகாரர்களுக்கு வாக்களித்து அவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவிட்டு பிறகு வந்து சத்தம் போட வேண்டாம்.225 பேரும் விலக வேண்டும் என்று கூற வேண்டாம்.–என்றார்.

அடிக்கடி தொலைபேசியில் பேசுவேன்.

அதற்காக நான் அரசில் இணைவேன் என்று அர்த்தமல்ல.அது அவருக்கும் தெரியும்.

**கேள்வி : அரசில் இணையுமாறு ஜனாதிபதி உங்களை அழைத்ததில்லையா?**

பதில் : அழைத்திருக்கிறார்.நான் மறுத்துவிட்டேன்.கோத்தாபய விரட்டப்பட்ட பின்னர் இருப்பது பொய்யான நாடாளுமன்றம்.எல்லோரும் எம்பி பதவியில் இருந்து விலக வேண்டும் என்று





# அவர்தானாம் முதலில்...

ஜேவிபியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவை இந்திய அரசு உத்தியோகபூர்வமாக அழைத்துப் பேசியதால் அதிகம் அப்செட் ஆகியிருப்பவர் சஜித் பிரேமதாசாதானாம்.

உண்மையில்,இந்திய அரசின் அழைப்பு முதலில் வந்தது சஜித் பிரேமதாசாவுக்குத்தானாம். ஆனால்,அவருக்கு இருந்த வேலைப்பளு காரணாமாக சந்திப்பை ஒத்திப்போடுமாறு சஜித் இந்திய தூதுவரை கேட்டுக்கொண்டாராம்.

அதன் காரணமாகத்தான் இந்தியா அனுரவுக்கு அந்த வாய்ப்பை வழங்கியது என்று சஜித் தரப்பு கூறி வருகிறது.

எப்படியாவது அந்த சந்திப்பை மேற்கொள்ள வேண்டும் என்று சஜித் தரப்பு ஓடித் திரிகிறதாம்.




# சம்பிக்கவுக்கு கம்மன்பில கடிதம்

சம்பிக்க ரணவக்கவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆசைப்படுகிறார்.அதற்கான தகுதி தனக்கு இருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

இதை அறிந்த உதய கம்மன்பில அவர் தகுதியற்றவர் என்று கூறுவதோடு அவர் ஏன் தகுதியற்றவர் என்ற காரணங்களையும் தொகுத்து வைத்துள்ளார்.

இந்தக் காரணங்களை பட்டியல்படுத்தி சம்பிக்க தகுதியற்றவர் என்று தெரிவித்து சம்பிக்கவுக்கு 5 பக்க கடிதம் ஒன்றை விரைவில் அனுப்பவுள்ளார்.



# விமானத்தில் இருந்து இறங்கும்வரை...



ரகசியங்களை பாதுகாப்பதில் ஜேவிபி கெட்டிக்காரர்கள். அனுரவின் இந்திய விஜயம் தொடர்பான ரகசியங்களையும் அவர்கள் அவ்வாறே பாதுகாத்தனர்.


அனுரவுக்கான இந்தியாவின் அழைப்பு கிடைத்ததும் ஜேவிபி அந்த செய்தியை வெளியிட விரும்பவில்லை.

அதை அறிந்த கட்சிகள் அனுரவின் விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து குழப்பிவிடுவார்கள் என்பதால்தான்.

ஜேவிபி குழு இந்திய தலைநகர் புதுடில்லியில் போய் இறங்கும்வரை ரகசியமாக வைத்திருத்தல் என்று முடிவெடுத்தார்கள்.அப்படியே செய்தார்கள்.

அங்கு அவர்கள் விமானத்தில் இருந்து இறங்கிய பின்தான் இங்கு ஜேவிபி செய்தியை வெளியிட்டது.அதுவரை எந்த ஊடகத்தாலும் கண்டுபிடிக்கவே முடியவில்லை.





# என்ன ஒரு அவமானம்...

மக்களுக்கு இலவசமாக காணிகள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு ஒன்று சில நாட்களுக்கு முன் ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்றது அல்லவா.

அங்கு நடந்த ஒரு சுவையான சம்பவம்தான் இது.

அந்த நிகழ்வுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எம்பி கயந்த கருணாதிலகவும் அழைக்கப்பட்டிருந்தார். அவர் நல்லாட்சி அரசில் காணி அமைச்சராக இருந்தமைதான் அதற்குக் காரணம்.

அதே நேரம்,கோத்தாவின் அரசில் காணி அமைச்சராக இருந்த எஸ்.எம் .சந்திரசேனவும் அழைக்கப்பட்டிருந்தார்.

அவர்கள் இருவரும் அங்கு நடத்தப்பட்ட விதம்தான் சிக்கலானது.கயந்தவுக்கு முன் வரிசை ஆசனம் வழங்கப்படட்டது.சந்திரசேனாவுக்கு பின் வரிசை ஆசனம்.

இதைப் பார்த்த நிகழ்வுக்கு வந்திருந்த மொட்டு எம்பிக்கள் அப்போதே விமர்சிக்கத் தொடங்கினர்.

அந்த விமர்சனம் அடங்கும் முன்பே அடுத்த காட்சி.

காணி உறுதிப்பத்திரங்களை மக்களுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி மேடைக்கு அழைக்கப்பட்டதோடு கயந்தவும் அழைக்கப்பட்டார்.

சந்திரசேன அழைக்கப்படவில்லை.அப்போது அதிர்ச்சியடைந்த மொட்டு எம்பிக்கள் சந்திரசேனவை பார்த்தனர்.அப்போது அவர் அவமானத்தால் கூனி குறுகியதை அவதானிக்க முடிந்தது.

# சஜித்துக்கு
## அறிவிக்கவில்லையாம்..

இந்த நிகழ்வு முடிவடைந்த பின் அன்றைய தினம் இரவே தொலைக்காட்சிகளில் செய்திகள் வந்தன.இதைப் பார்த்த ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

உடனடியாக சஜித்துக்கு தொலைபேசி அழைப்பு எடுத்துக் கூறினர்.இதுபற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் இதில் கலந்துகொள்ளப் போவதாக கயந்த தன்னிடம் சொல்லவில்லை என்றும் சஜித்துக்கு தொலைபேசி அழைப்பு எடுத்த எல்லோருக்கும் கூறினார்.

கட்சியின் செயலாளர் ரஞ்சித் மதுமபண்டாரவுக்கு சஜித் தொலைபேசி அழைப்பு எடுத்து விசாரித்தார்.அவரும் தனக்குத் தெரியாது என்றார்.

இந்த நிகழ்வுக்கு முதல் நாள் சஜித்தின் பல நிகழ்வுகள் காலியில் இடம்பெற்றன.அப்போது அவற்றில் கலந்துகொண்ட கயந்த இதுபற்றி எதுவுமே சஜித்திடம் கூறவில்லையாம்.

# எல்லோரும் கடும் ஏச்சு

அந்த நிகழ்வு முடிந்து கயந்த வீடு போய்ச் சேரும் முன்பே அவருக்கு தொலைபேசி அழைப்புகள் வரத் தொடங்கிவிட்டன.

எல்லாம் அவரது ஆதரவாளர்களிடம் இருந்து. எல்லாமே ஏச்சு.இதனால் மனமுடைந்து போன கயந்த அப்போதே ரஞ்சித் மதுமபண்டாரவுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து நடந்தவற்றைக் கூறினார்.

"" நான் அரசில சேரும் நோக்கத்துல அந்தக் கூட்டத்துக்கு போகல.நான் அமைச்சராக இருந்தபோது நான் கெபினட்டுக்கு போட்ட சப்ஜக்ட் அது.அதான் அதுக்கு போன."" என்றார்.

""அப்படின்னா மீடியாவுக்கு சொல்லுங்க"" என்றார் ரஞ்சித்.

அதற்கான ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்து தருமாறு கயந்த கேட்டதும் இதுபற்றி ரஞ்சித் சஜித்திடம் கூறினார்.

அதைப் பெரிதாக அலட்டிக்கொள்ளாத சஜித் "" அவர் எதாவது செய்யட்டும் "" என்று கூறினார்.



# சஜித்தின் 15 பேர் ரணிலுடன்...

ரணிலுக்கு ஆதரவான சிலர் சஜித் தரப்பில் உள்ளார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.அவர்கள் ரகசியமாக ஜனாதிபதியை சந்தித்துப் பேசுவதுமுண்டு.

அவ்வாறான சந்திப்பொன்று சில நாட்களுக்கு முன்பும் இடம்பெற்றது.இரண்டு எம்பிக்கள் ஜனாதிபதியை சந்தித்தனர்.

அவர்கள் பல விடயங்களை ஜனாதிபதியுடன் பேசினர். அதில் ஒன்றுதான் ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் 15 பேர் ஜனாதிபதியுடன் இணைவதற்குத் தயாராகவுள்ளனர் என்ற செய்தி.

தேர்தலை அறிவித்துவிட்டு கூட்டமைப்பை உருவாக்கினால் அந்தக் கூட்டமைப்பில் 15 பேரும் இணைவோம் என்று அவர்கள் ஜனாதிபதியிடம் கூறினார்.

# உணவுப் பாதுகாப்பு மாநாடு




U.S. Soybean Export Council (USSEC) இன் வருடாந்த ஞரளவயயைெளரஅஅவை 2024 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, விவசாய வணிகத்துறை தலைவர்கள் மற்றும் தொழில்துறை தொலைநோக்குப் பார்வையாளர்கள் துபாயில் அண்மையில் ஒன்றுகூடினர்.

ஸ்மார்ட் பாதுகாப்பு முயற்சிகள், நிலைபேறான விவசாய நடைமுறைகள், உணவுப் பயிர்ச்செய்கை, உணவு உற்பத்தி, உணவு விநியோகம், உணவு நுகர்வு ஆகியவற்றில் முன்னேற்றமடைவது தொடர்பில் இங்கு பல்வேற கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

உலக வங்கியின் அறிக்கையின் படி, தெற்காசியா ஒரு ”புதிய காலநிலை இயல்பு நிலை” 1 ஐ அனுபவித்து வருகிறது.

இது வெப்ப அலைகள், சூறாவளி, வரட்சி, வெள்ளம் போன்ற எதிர்பாராத வானிலை நிலைமைகள் என குறிப்பிடப்படுகிறது. அதிகரித்து வரும் சனத்தொகை மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலையுடன், தெற்காசியா பிராந்தியத்தின் உணவு மற்றும் போசணை தொடர்பான பாதுகாப்பில், காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை தடுப்பது தொடர்பில் அதன் முயற்சிகளை துரிதப்படுத்த வேண்டியுள்ளது.

# APB மாநாட்டின் தங்க கூட்டாளராக மக்கள் வங்கி




தொழில்முறை வங்கியாளர்கள் சங்கத்தால் (Association of Professional Bankers APB) ஏற்பாடு செய்யப்பட்டு, மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்ற 34ஆவது வருடாந்த மாநாட்டுக்கான தங்கக் கூட்டாளராக மக்கள் வங்கி பெருமையுடன் செயல்பட்டுள்ளது.

பெப்ரவரி 14 அன்று கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற இம்மாநாடு, வங்கித்துறையின் தொழில் வல்லுனர்கள், தொழில்துறை தலைவர்கள் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர் என பெரும் எண்ணிக்கையானோரை ஈர்த்தது.

மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (சர்வதேச வங்கிச்சேவை) துஷாரி ஹேவாவசம் அவர்கள், இதற்கான பங்களிப்பை யீடீ தலைவர் பி.ஏ.எச்.எஸ். பிறீனா அவர்களிடம் கையளித்து வைப்பதை படத்தில் காணலாம்.

மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் (வழங்கல் மார்க்க முகாமைத்துவம்) ஈ.பீ.ஏ. சிசிர குமார மற்றும் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி நாலக விஜயவர்த்தன ஆகியோரும் அருகில் உள்ளனர்.

வங்கிச்சேவை சமூகத்தினுள் முறையான உரையாடல் ஈடுபாடு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை வளர்ப்பதில் மக்கள் வங்கியின் அர்ப்பணிப்பினை இந்நிகழ்வு காண்பிக்கின்றது.

# அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் தூதுக்குழு இலங்கை விஜயம்





இலங்கைக் குடியரசிற்கான சவூதி அரேபியத் தூதுவர் கௌரவ காலித் பின் மூத் அல்-க்தானி அவர்கள் இன்று, பெப்ரவரி 27, 2024 செவ்வாய்க்கிழமை, அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் (SFD) அபிவிருத்தி மதிப்பீட்டுப் பிரிவின் பிரதிநிதிகள் குழுவை தூதரகத்தில் வரவேற்றார்.

இலங்கையின் சுகாதார அமைச்சினால் 75 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்ட கால்-கை வலிப்பு மருத்துவமனை மற்றும் சுகாதார நிலையங்கள் திட்டத்தின் செயற்படுத்தலுக்குப் பின்னரான மதிப்பீட்டை மேற்கொள்வதே இந்த



விஜயத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்திற்கு, வளர்ச்சிக்கான சவூதி நிதியம் 32 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கி உதவியது. இத்திட்டம் டிசம்பர் மாதம் 2017ஆம் ஆண்டில் இல் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் இம்மருத்துவமனையானது 242 படுக்கைகள் கொண்ட 8 தளங்களைக் கொண்ட கட்டடத்தில் அமையப் பெற்றுள்ளது. இது கொழும்பு தேசிய மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ளது. அதிகரித்து வரும் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மூளையின் மின் ஆற்றலின் அதிகரிப்பால் ஏற்படும் வலிப்புக்கு சிகிச்சையளிப்பதற்கான சேவைகளை வழங்குகி வருகிறது.

# ஹரின் டி எஸ் விஜயரத்னவை பணிப்பாளர் சபைக்கு நியமித்துள்ள Ceylon Tobacco நிறுவனம்



Ceylon Tobacco Company PLC (CTC) பெப்ரவரி 01, 2024 புகழ்பெற்ற கூட்டாண்மைத் தலைவர் ஹரின் டி எஸ் விஜயரத்னவை அதன் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக நியமித்துள்ளது.

இந்த நியமனம் மூலம், ஊவுஊ பணிப்பாளர்கள் சபையில் தலைவர் சுரேஷ் ஷா, முகாமைத்துவப் பணிப்பாளர் மோனிஷா ஆபிரகாம், குஷான் டி அல்விஸ், கேரி டாரன்ட், ருமனா ரஹ்மான், ஸ்டூவர்ட் கிட், தௌஹிட் அக்பர் மற்றும் ஹரின் டி எஸ் விஜயரத்ன ஆகியோர் அடங்குவர்.

விஜேயரத்ன இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் இணை அங்கத்தவர் மற்றும் ருமுஇன் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினராக உள்ளார். Bahrain Investcorp வங்கி, Grindlays Bahrain வங்கி, Ernst & Young Bahrain மற்றும் நுசளெவ ரூ லுழரபெ ஞசைந டுயமெய ஆகிய நிறுவனங்களில் பெறப்பட்ட வெளிப்பாட்டின் மூலம் பொது நிர்வாகம், நிதி முகாமைத்துவம் மற்றும் தணிக்கை ஆகியவற்றில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் உள்ளவர்.

# Zesta Tea 25வருட நிறைவில்



சன்ஷைன் கன்ஸ்யூமர் லங்காவின் கீழ் நன்கு அறியப்பட்ட வர்த்தக நாமமான ணுநளவய வநய, நாட்டின் தேனீர் பிரியர்களுக்கு முத்திரையிடப்பட்ட, உயர்தர மற்றும் ஏற்றுமதி செய்யக்கூடிய தேயிலையை அறிமுகப்படுத்திய இலங்கையின் முதல் வர்த்தக நாமம், தரம், சுவை மற்றும் பாரம்பரியத்தை நினைவூட்டும் வகையில் தனது 25வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

இலங்கை தேயிலை தொழிலில் நிகரற்ற மேன்மை சமீபத்தில் கொண்டாடப்பட்டது. Zesta பிராண்டின் வரலாற்றில் ஒரு மைல்கல்லைக் குறிக்கும் வகையில் ஜனவரி 17, 2024 அன்று Zesta இன் ஊழியர்கள் மற்றும் Sunshine Holdings இன் சிரேஷ்ட நிர்வாகத்தின் பங்கேற்புடன் கொண்டாட்ட நிகழ்வு நடைபெற்றது.

புத்தாக்கம் மற்றும் அதிநவீனத்துடன் உயர்தர தேயிலையை இலங்கை சந்தைக்கு வழங்குவதற்கான நற்பெயருடன், Zesta 1998 ஆம் ஆண்டு முதல் தடவையாக இலங்கையர்களுக்கு 100% Broken Orange Pekoe Fannings (BOPF) தனித்துவமான கலவையை அறிமுகப்படுத்தியது.

இது சர்வதேச சந்தைக்கு மாத்திரமே சிறந்த தேநீர் என்ற கருத்திற்கு சவாலை ஏற்படுத்தியது. பாரம்பரிய அணுகுமுறைகளில் இருந்து விலகி, துணிச்சலான புதிய உத்திகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களின் இதயங்களையும் மனதையும் நெருங்கி வருவதன் மூலம், இலங்கையர்களுக்கு மிக உயர்ந்த தரமான தேயிலையை வழங்குவதில் Zesta இன் வர்த்தக நாம அர்ப்பணிப்பு, அதை பிரபலமான வீட்டுப் பெயராக மாற்றியுள்ளது.

# Kick Off 2024வில் அலியான்ஸ் லைஃப்வின் விற்பனை மூலோபாயம்




அலியான்ஸ் லங்காவின் ஆயுள் காப்புறுதிப் பிரிவும், உலகளாவிய Allianz SE குழுமத்தின் உறுப்பு நிறுவனமுமான அலியான்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட், மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட டுகைந Sales Kick Off 2024 நிகழ்வில் இந்த ஆண்டிற்கான தனது விற்பனை மூலோபாயம் மற்றும் நோக்கங்களை உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளது.

தலைமை அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற இந்த நிகழ்வானது, அலியான்ஸ் லைஃப் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட் நிறுவனத்தின் விற்பனை அணிக்கு ஒரு குறிப்பிடத்தக்க தருணமாக அமைந்ததுடன், மூலோபாய நுண்ணறிவுகள், உத்வேகமளிக்கும் கலந்துரையாடல்கள் மற்றும் வெற்றியை நோக்கி அணியை வலுவூட்டி, வழிநடத்திச் செல்வதற்கான முக்கியமான அறிவிப்புகளை வழங்கியது.

முதல் காலாண்டிற்கு திட்டமிடப்பட்ட, எதிர்வரவிருக்கும் போட்டிகள் பற்றிய கலந்துரையாடல்கள், ஆண்டின் தொடக்கத்திலேயே வெற்றிகளுக்கு ஒரு மூலோபாய திட்டத்தை வழங்குகின்றன

மேலும், இதில் பங்கேற்றவர்கள் வருடாந்த மற்றும் வருடத்திற்கு இரு முறை வழங்கப்படும் விருதுகள் பற்றிய பெறுமதிமிக்க நுண்ணறிவுகளைப் பெற்றுக்கொண்டனர்.

இது விற்பனை அணி மத்தியில் உற்சாகத்தையும் எதிர்பார்ப்பையும் வளர்த்தது. மதிப்புமிக்க மில்லியன் டொலர் வட்ட மேசை (Million Dollar Round Table -MDRT) அங்கீகாரத்தை அடைவதற்கான அளவுகோல்களும் அறிவிக்கப்பட்டன.

# எனது எதிர்காலம்,எனது கனவு




இளம் சிந்தனையாளர்களின் கனவுகள் மற்றும் சிந்தனைகள் ஆகியவற்றை கௌரவிக்கும் வகையில் அமானா வங்கியினால் அண்மையில் “எனது எதிர்காலம், எனது கனவு” எனும் தலைப்பில் முன்னெடுக்கப்பட்ட அகில இலங்கை கட்டுரைப் போட்டியின் விருதுகள் வழங்கும் நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) அண்மையில் நடைபெற்றது.

இலங்கை நிலைபேறான அபிவிருத்தி சம்மேளனத்தின் பணிப்பாளர் நாயகம் சமிந்திரி சப்ரமாது மற்றும் அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹமட் அஸ்மீர் ஆகியோர் சிறப்பு பேச்சாளராக இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வளர்ச்சியை செயற்படுத்துவது மற்றும் வாழ்வுக்கு வளமூட்டுவது எனும் வங்கியின் நோக்கத்துக்கமைய, ஆக்கத்திறன், சிந்தனை வெளிப்பாடு மற்றும் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை வெளிக்கொண்டு வரும் வகையில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போட்டி கனவுகளுக்கு வலுவூட்டும் சக்தியாக அமைந்திருப்பதுடன், இளம் சிந்தனையாளர்களை வலிமைப்படுத்துவது மற்றும் முன்னால் காணப்படும் எல்லைகளற்ற வாய்ப்புகளை செயற்படுத்துவதாக அமைந்துள்ளது.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் 1ஆம் இடம், 2ஆம் இடம் மற்றும் மெரிட் விருதுகள் வெவ்வேறாக வழங்கப்பட்டிருந்தது.

மொத்தமாக 42 வெற்றியாளர்கள் தமது பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் போன்றோர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

போட்டியில் 3,500க்கும் அதிகமான கட்டுரைகள் நாடு முழுவதிலுமிருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. போட்டிக்கு கிடைத்திருந்த பல்வகையான ஆக்கங்களினூடாக இன்றைய இளைஞர்களின் கனவுகளை வெளிப்படுத்த முடிந்திருந்தது.

ஒவ்வொரு பிரிவிலும் முதலிட வெற்றியாளர்கள் ரூ. 50,000 பணப் பரிசை பெற்றுக் கொண்டதுடன், இரண்டாமிட வெற்றியாளர்கள் ரூ. 30,000 பெற்றுக் கொண்டனர். மேலும் ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த ஐந்து கட்டுரைகளுக்கு தலா ரூ. 10,000 வீதம் வழங்கப்பட்டது. இளைஞர்கள் காண்பித்திருந்த திறமைகளை வெளிப்படுத்தியிருந்தது.

# People's Leasing & Finance வளர்ச்சி பாதையில்





இலங்கையின் முன்னணி வங்கியல்லாத நிதிச் சேவை வழங்குநரான பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் ஃ பினான்ஸ் பிஎல்சி (PLC), 2023ஃ24 நிதியாண்டின் மூன்றாம் காலாண்டில் வலுவான நிதியியல் பெறுபேறுகளைப் பதிவு செய்துள்ளது.

202324 நிதியாண்டின் மூன்றாம் காலாண்டின் 9 மாத காலப்பகுதியில் வரிக்குப் பிந்திய இலாபமாக ஜீயுவுஸ ரூபா 2,141 மில்லியனை பதிவு செய்துள்ளது. கடந்த நிதியியல் ஆண்டின் இதே காலப்பகுதியில் வரிக்கு பிந்திய இலாபமாக 1,039 மில்லியன் ரூபாவை பதிவு செய்துள்ள நிலையில் இது இவ்வாண்டு 30.8மூ அதிகரிப்பினை பதிவு செய்துள்ளது.

இவ் வளர்ச்சியானது சீரற்ற கட்டணங்கள் மற்றும் பிற இழப்புகளின் மாற்றத்திற்குக் காரணமாக திகழ்வதுடன் , நிதிச் சிறப்பு மற்றும் மூலோபாய நிதி முகாமைத்துவத்துக்கான PLC இன் அர்ப்பணிப்பினை வெளிப்படுத்துகிறது.

இந்தக்காலகட்டத்தில் மிதமான வட்டி வருமானம் இருந்தபோதிலும், 2023ஃ24 நிதியாண்டின் மூன்றாவது காலப்பகுதியில் [Q3] தேறிய வட்டி வருமானத்தில் 2.8மூ பாராட்டத்தக்க உயர்வைப் பதிவு செய்தமையானது பயனுள்ள நிதியுக்திகள் மற்றும் விவேகமானமுகாமைத்துவ நடைமுறைகளைக் குறிக்கிறது.

டிசம்பர் 31, 2023 இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களில் சீரற்ற மாற்றத்துக்கான தொகை ரூ. 114 மில்லியனுடன் கடன் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் பண திரட்டலை ஊக்குவிப்பதில் PLC இன் கவனம் நேர்மறையான முடிவுகளைத் தந்துள்ளது, முந்தைய ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது இது 94.4மூ அதிகரித்துள்ளது.

அதன் இருப்பு நிலைக்குறிப்பு மற்றும் கடன்கள் மற்றும் வருமதிகளின் பிரிவை சரியான அளவீடு செய்வதில் தொடர்ந்து கவனம் செலுத்துவதன் மூலம், மாறிவரும் சந்தை நடவடிக்கைகளுக்கேற்ப சாதகமான வர்த்தகச் சூழலை வழிநடத்துவதில் PLC உறுதியை வெளிப்படுத் தியுள்ளது.

டிசம்பர் 31, 2023 முடிவடைந்த காலப்பகுதியில் மொத்த சொத்துத் தளம் ரூ. 156,007 மில்லியனை பதிவு செய்துள்ள அதேவேளை , மொத்த கடன்கள் மற்றும் வருமதிகள் பிரிவு ரூ. 102,275 மில்லியனை பதிவு செய்துள்ளது.







# காதலர் தினத்தில் TikTok இன் படைப்பாற்றல் ஊக்குவிப்பு

மன்மதனின் அம்பானது குறி வைத்ததினைப் போன்று, காதலர் தினத்தினை னுபைவையட முறையில் கொண்டாடுவதில் வுமைவுழம ஆனது முன்னணியில்த் திகழ்கின்றது.

இது பாவனையாளர்களினை நவநாகரீகமான மற்றும் மனமகிழ்வூட்டும் அனுபவத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக ஒன்றிணைக்கின்றது.

அதன் பல்வேறு உள்ளடக்கங்கள் மற்றும் பாவனையாளர் நட்பு அம்சங்களுடன், TickTok ஆனது பாதுகாப்பான மற்றும் மனதிற்கு இசைவான நிகழ்நிலை சூழலினை ஊக்குவிக்கின்றது,

இது படைப்பாளர்களுக்கும் தம்பதிகளுக்கும் மிகவும் உகந்ததாகும். காதல் ஜோடிகள் Dating செய்ய உகந்த இடம் எதுவெனத் தேட, காதலர்கள் பயணத்தினை மேற்கொள்ளத் திட்டமிடுவதோ அல்லது சரியான ஆடையைத் தேர்ந்தெடுப்பதோ

இது போன்ற அம்சங்களினைப் பாவனையாளர்கள் தளத்தில் ஊக்கமளிக்கும் + களின் மூலம் சொல்லப்படும் விடையத்தில் இருந்து எளிதாகக் கண்டறியலாம்.




# சர்வதேச தொலைக்காட்சி சந்தையில் முதலிடம்

Samsung Electronics ஆனது சர்வதேச தொலைக்காட்சி சந்தையில் அதன் தலைமை இஸ்தானத்தினை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது, ஆம், இத்தொழில்துறையின் உச்சியில் 18 வருடமாகத் தனது ஆட்சியினைப் பாதுகாத்து வந்திருக்கின்றது.

சந்தை ஆராய்ச்சி நிறுவனமான Omdia இன் கூற்றுப்படி, Samsung ஆனது 2023 ஆம் ஆண்டில் உலகளாவிய தொலைக்காட்சிச் சந்தையில் 30.1% பங்கினைக் கைப்பற்றியது, இது 2006 முதல் தொழில்துறையின் தலைவராக அதன் நிலையினை உறுதிப்படுத்தியுள்ளது.

Samsung நிறுவனம் ஆனது அதன் மேம்பட்ட QLED மற்றும் OLED Model களால் இயக்கப்படும் Premium மற்றும் அகண்ட திரை தொலைக்காட்சி பிரிவுகள் தொடர்பாக சந்தைத் திட்டமிடலுக்கு மிகுந்த முக்கியத்துவத்தினை அளித்ததன் மூலமாக இச்சாதனையானது எட்டப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் சந்தையில் அறிமுகப்படுத்தப் பட்டதிலிருந்து, சமீபத்திய Neo QLED வடிவமைப்புகள் உட்பட Samsung இன் QLED TV தொடரில், ஒட்டுமொத்த விற்பனையில் 40 ஆடைடமைழெ ருமைவ களை கடந்துள்ளது. 2023 ஆம் வருடத்தில் மட்டுமே, QLED வரிசையில் 8.31 Million Unit விற்பனையினைப் பதிவு செய்யதுள்ளது.

Premium தொலைக்காட்சி பிரிவில், குறிப்பாக 75 அங்குலங்களுக்கும் அதிகமான தொலைக்காட்சிகள் மற்றும் 2,500 டாலருக்கும் அதிகமான விலையில் ளுயஅளரபெ ஆனது தனது முன்னிலையினை நிரூபித்துக் காட்டியுள்ளது.

# MAGA நிறுவனத்திற்கு Primeஇன் கௌரவம்



இலங்கையின் பெருமைக்குரிய வாழ்விடப் பகுதிகளின் காரணகர்த்தாவாக அமைந்துள்ள Prime குரூப், அதன் 'The Grand' Ward Place, கொழும்பு 7 அதிசொகுசு வதிவிட நிர்மாணத் திட்டத்தின் பிரதான ஒப்பந்தக்காரரான MAGA என்ஜினியரிங்கை கௌரவித்திருந்தது.

ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் உப சரத்தான 11.8 இன் அடிப்படையில், ஒப்பந்தக்காரரினால் சகல ஒப்பந்த ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை, பொறியியலாளரின் திருப்திக்கமைய அனைத்து அம்சங்களும் பரிசோதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டதற்கமைய தக்கவைப்பு கொடுப்பனவை ஆயுபுயு என்ஜினியரிங் தவிசாளரும் முகாமைத்துவ பணிப்பாளருமான எம்.ஜி.குலரட்னவிடம், Prime குரூப் தவிசாளர் பிறேமலால் பிராஹ்மனகே கையளித்திருந்தார்.

ஒப்பந்த உடன்படிக்கை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதை தொடர்ந்து, சிறந்த பணி மற்றும் சிறப்புக்கான அர்ப்பணிப்புக்காக ஆயுபுயு என்ஜினியரிங்கை Prime குரூப் கௌரவித்திருந்தது

MAGA என்ஜினியரிங் ஆற்றியிருந்த பங்களிப்பை Prime குரூப் தவிசாளர் பிறேமலால் பிராஹ்மனகே மற்றும் Prime லான்ட்ஸ் ரெசிடென்சிஸ் பிஎல்சி தலைமை அதிகாரி சந்தமினி பெரேரா ஆகியோர் பாராட்டி கருத்துத் தெரிவிக்கையில், 'The Grand' ஐ நிர்மாணிப்பதில், ஆயுபுயு நிறுவனத்தின் கடின உழைப்பு, உயர் தர நியமங்கள் மற்றும் நிர்மாணச் செயற்பாடுகளில் காண்பித்திருந்த அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்காக நாம் நன்றியை தெரிவிக்கின்றோம். என்றனர்.

# Emeraldஇன் காட்சியறை சாய்ந்தமருதில்




இலங்கையின் முன்னணி ஆடவருக்கான ஆடை வர்த்தகநாமமான Emerald, தனது புத்தம் புதிய காட்சியறையை அண்மையில் சாய்ந்தமருதில் திறந்து வைத்துள்ளதன் மூலம், அதிகளவான வாடிக்கையாளர்களை சென்றடைவதற்கான தனது அர்ப்பணிப்பை உறுதிப்படுத் தியுள்ளது.

இலக்கம் 52, பிரதான வீதியில் அமைந்துள்ள இக்காட்சியறையானது இவ்வரத்தகநாமத்தின் நான்காவது காட்சியறையாகும் என்பதோடு, ஒப்பிட முடியாத பேஷன் அனுபவத்தை நாடு முழுவதும் வழங்குவதற்கான அதன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இது சுட்டிக்காட்டுகிறது.

அதன் புகழ்பெற்ற ஆடவர்களுக்கான ஆடை வகைகளுக்கு அப்பால், சாய்ந்தமருது காட்சியறையானது பெண்களுக்கான ஆடைகள் (Daywear) மற்றும் வசீகரிக்கும் ஆடம்பர சல்வார்களின் (Luxury Shalwars) வரிசையை கொண்டுள்ளது.

இந்த அற்புதமான அறிமுகத்தின் மூலம், ஸ்டைலான மற்றும் அதிநவீன பெண்களின் ஆடைகளுக்கான வளர்ந்து வரும் கேள்வியை அது பூர்த்தி செய்கிறது. Emerald வர்த்தகநாமம் முழுக் குடும் பத்திற்கும் ஏற்ற ஒரே இடமாக மாறுவதற்கு இது வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

இக்காட்சியறையைத் திறந்து வைத்து கருத்துத் தெரிவித்த, Emerald இன்டர்நேஷனல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எப்.எம். இக்ராம், 'Emerald வர்த்தகநாமத்தின் அனுபவத்தை சாய்ந்தமருதுக்குக் கொண்டுவருவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த விரிவாக்கமானது, அதிகளவான வாடிக்கையாளர்களுக்கு மாறுபட்ட மற்றும் உயர்தர பேஷனை வழங்குவதற்கான எமது உறுதிப்பாட்டை காட்டுகிறது. பெண்களுக்கான னுயலறநயச மற்றும் ஆடம்பர ஷல்வார்களின் (Luxury Shalwars) அறிமுகத்தின் மூலம், எமது வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்து, உண்மையான ஷொப்பிங் அனுபவத்தை உருவாக்குகிறோம்.” என்றார்.





# தாய்மாரை தொழில்முனைவர்களாக வலுப்படுத்தும் ‘மௌ திரிய’

இலங்கையிலுள்ள சிறுவர்களுக்கு ஆறு தசாப்தங்களுக்கு மேலாக சேவையாற்றிவரும் நாட்டின் பழமையான காகிதாகித வர்த்தநாமமான ‘ஹோம்ரண்’, பாதுகாப்பான மற்றும் மகிழ்ச்சியான வீடுகளை உறுதிப்படுத்தும் நோக்கில் பெண்களை தொழில்முனைவர்களாக வலுப்படுத்தும் ‘ஹோம்ரண் மௌ திரிய’ திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

கொவிட் மற்றும் நிதி நெருக்கடி போன்றவற்றின் காரணமாக ஒடுக்கப்பட்ட தாய்மார் தொழில்களைத் தேடுவதற்காகத் தமது பிள்ளைகளைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதுடன், இது குடும்பங்களின் நிலைப்புத்தன்மை மற்றும் நல்வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

மேலும், தாயின் இடப்பெயர்வினால் பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுதல், பாடசாலைகளை இடைநடுவில் கைவிடுதல் மற்றும் பௌதீக, பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாதல் போன்ற பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை சிறுவர்களுக்கும் ஏற்படுகிறது.

மேலும், இலங்கையில் தொழில்வாய்ப்பு இன்றி 63மூ ஆன பெண்கள் வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருப்பதாகவும், 36மூ ஆனவர்கள் சுயதொழிலில் ஈடுபடுவதற்கு ஆர்வம் கொண்டுள்ளபோதும் அதற்குத் தேவையான மூலதனம் மற்றும் வழிகாட்டல்கள் இன்றி இருப்பதாலும் அவர்கள் பல்வேறு கஷ்டங்கள் மற்றும் சவால்களுக்கு முகங்கொடுத்திருப்பதாக ஆய்வின் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.